இயலாத ஒன்றாக இருந்து வருகிற நிலையில் இங்கு அப்படி படுக்கை வசதியை விரிவுபடுத்துவதோ அல்லது ஏற்படுத்துவதோ இப்போது இயலாத காரியம்.

* 338 வினா—திரு. ந. சோமசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டை அரசினர் மருந்தகத்தில் பெண் மருத்துவர் ஒருவரை நியமனம் செய்ய செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டை அரசினர் மருந்தகத்தில் கூடுதலாக ஒரு பெண் மருத்துவரை நியமிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆலைத் தொழிலாளர்களின் விடுப்புச் சம்பளம்

* 339 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. லீவ் எடுத்தால் லீவுக்குண்டான சம்பளம் லோகல் ஆபீசில் பெறுவதற்குப் பதிலாக அந்தந்த மில்களிலேயே விநியோகிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. விடுமுறை எடுத்தால் விடுமுறைக்குண்டான சம்பளம் லோகல் ஆபீசில் பெறுவதற்குப் பதிலாக அந்தந்த மில்களிலேயே விநியோகிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: இந்த லீவ் சம்பளம் பெறுவதற்கு ஒரு நாள் லீவ் எடுத்துக் கொண்டு லோக்கல் ஆபீஸுக்குப் போக வேண்டியிருக்கிறது. அதை ஆலைகளிலேயே விநியோகிக்கும் ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமானால் இப்படி லீவ் எடுக்காமலேயே அங்கேயே பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதைச் செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது சிபார்சு செய்யுமா?

1972 மார்ச் 7]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே இதுபற்றி ஈ.எஸ்.ஐ. இயக்குநர் சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சுகள் எல்லாம் 25—4—1971-ல் கோவையில் நடைபெற்ற ஈ.எஸ்.ஐ. மண்டலக் குழுவில் தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள் பிரதிநிதிகள் இவர்களிடையே ஆலோசனை செய்யப்பட்டு தற்போதுள்ளபடி லோக்கல் ஆபீஸில் அப்படிச் சம்பளம் வழங்கப்படும் முறை தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டுமென்றும் அதுதான் சிறந்தது என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக எனக்குத் தெரிந்த வரையில் மதுரையில் இம்மாதிரி ஈ.எஸ்.ஐ. லீவ் சம்பளம் வாங்குவதில் காலதாமதம் ஆகிறது. இன்று கூடப் பார்த்தாலும் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் க்யூவில் நிற்பதும் ஒருநாள் லீவ் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. ஆகவே, இதைத் தவிர்க்க வேறு ஏதாவது ஆலோசனை அரசிடமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்களின் யோசனை சமயம் வரும்போது பரிசிலனை செய்யப்படும்.

திரு. பா. நாகலிங்கம் : மீஞ்சூரில் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை இருக்கிறது. அங்கு லோக்கல் ஆபீஸ் இல்லாமல் கூட அம் மருத்துவமனை இடம் பெறுகிறது. தொழிலாளர்கள் எல்லாம் திருவொற்றியூருக்கு வந்துதான் லீவ் ஊதியம் பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, மீஞ்சூரில் ஒரு லோக்கல் ஆபீஸ் திறப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கெனவே அதற்காகச் செலவிடும் தொகை அதிகமாக மாநில அரசுக்கு ஏற்படுவதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். இப்போது அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கு அரசாங்கம் இணங்குவது என்றால் அதற்காக மேலும் செலவாகும். இருந்தாலும் அதுபற்றி யோசிக்கப்படும்.